# யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை

## வல்வெட்டித்துறை

## பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன்

# பரிசளிப்பு விழா - 2010/2011

**காலம் : 24.09.2011 சனிக்கிழமை பி.ப.1.30 மணி**

**இடம் : பாடசாலை மண்டபம்**

தலைவர் :

**திரு. ஆ. சிவநாதன் அவர்கள்** (அதிபர்)

பிரதம விருந்தினர் :

**திரு. சி.நந்தகுமார் அவர்கள்**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

சிறப்பு விருந்தினர் :

**திரு. விமலதாஸ் கவிச்செல்வன் அவர்கள்**

(தலைவர், வல்வைஒன்றியம், வடபிராந்திய முகாமையாளர் Hutch)

பரிசில் வழங்கல்:

**திருமதி. யமுனா நந்தகுமார் அவர்கள்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பழைய மாணவர் சங்கம்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

# யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

வல்வெட்டித்துறை

# பரிசளிப்பு விழா - 2010/2011

**காலம் : 24.09.2011 சனிக்கிழமை பி.ப.1.30 மணி**

| | | |
|---|---|---|
| 1.30 மணி | - | பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர் அழைப்பு |
| 1.50 மணி | - | மங்கள விளக்கேற்றல் |
| 1.55 மணி | - | இறைவணக்கம் |
| 2.00 மணி | - | ஆசியுரை<br>சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் அவர்கள் |
| 2.10 மணி | - | வரவேற்புரை<br>திருமதி. ந.திருநாவுக்கரசு |
| 2.20 மணி | - | அதிபர் அறிக்கை |
| 2.40 மணி | - | சிறப்பு விருந்தினர் உரை<br>திரு. விமலதாஸ் கவிச்செல்வன் அவர்கள் |
| 2.50 மணி | - | பரிசளிப்பு<br>திருமதி. யமுனா நந்தகுமார் அவர்கள் |
| 3.15 மணி | - | பிரதம விருந்தினர் உரை<br>திரு. சி.நந்தகுமார் அவர்கள் |
| 3.30 மணி | - | நன்றியுரை<br>திருமதி. ச.புலந்திரலிங்கம் |
| 3.40 மணி | - | இடைவேளை |
| 4.00 மணி | - | கலை நிகழ்வுகள் |
| 5.30 மணி | - | பாடசாலை கீதம் |

# வல்வை சிவகுரு வித்தியாசாலை பரிசளிப்பு விழா
## 2010/2011
## பாடசாலை அதிபரின் அறிக்கை

மதிப்பிற்குரிய சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் அவர்களே! மதிப்பிற்குரிய பிரதமவிருந்தினர் வடமராட்சிக் கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி.நந்தகுமார் அவர்களே அவர்தம் பாரியார் மெதடிஷ் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி. யமுனா நந்தகுமார் அவர்களே சிறப்பு விருந்தினர் HUTCH வடபிராந்திய முகாமையாளரும் வல்வை ஒன்றியத் தலைவரும் பழையமாணவருமாகிய திரு. விமலதாஸ் கவிச்செல்வன் அவர்களே பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. ச.தர்ம குலசிங்கம் அவர்களே பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. கிருபாகர் அவர்களே வருகை தந்துள்ள கல்வி அதிகாரிகளே, ஆசிரிய ஆலோசகர்களே பிற பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே அமைப்புக்களின் உறுப்பினர்களே பழைய மாணவர்களே பெற்றோர்களே எமது பாடசாலை ஆசிரியர்களே மாணவர்களே நலன்விரும்பிகளே அனைவருக்கும் அன்பு கனிந்த வணக்கங்கள் உரித்தாகுக.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிவகுருவித்தியாசாலை 2004ம் ஆண்டு சுனாமியின் பேரழிவுக்குட்பட்டு மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட நிலையில் இக்கல்விச் சாலையின் பரிசளிப்பு விழா 2010/2011 அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பிரதேசம் கடந்தகாலப் போர்ச் சூழலினால் பேரழிவுகளையும் இடப்பெயர்வுகளையும் நெருக்கடிகளையும் கண்டு தற்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழலினால் பாடசாலை பௌதீகச் சூழலும் மானிடச் சூழலும் வளம்பெற்று வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. சுனாமியினால் எமது பாடசாலை பேரழிவுக்குள்ளான போது எமது பாடசாலையை மீண்டும் புதிய வடிவத்தில் கட்டியெழுப்ப UNICEF முன்வந்தது. இதன் காரணமாக 2006ம் ஆண்டு ஏப்ரல் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடவேலை 2006ம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக வேலைகள் முழுமையாக நிறைவேற்ற முடியாதநிலையில் 2008ம் ஆண்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2010ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் UNICEF மீண்டும் வேலைகளை நிறைவு செய்யும் வகையில் Eurovile ஸ்தாபனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் குறையாக கீழிருந்த வேலையையும் நிறைவு செய்து 1ம் மாடி வேலைகளையும் நிறைவு செய்து ஒப்படைத்த போது 03.06.2011 பால்காய்ச்சி சமயாசார முறைப்படி பொறுப்பேற்கப்பட்டது. பின்னர் உத்தியேக பூர்வமாக UNICEF இலங்கை வதிவிடப்பிரதிநிதி Reza Hossaini அவர்களால் 18.07.2011 திறந்துவைக்கப்பட்டு தற்போது வகுப்பறைகளையும் விஞ்ஞானகூடம், நூலகம் என்பவற்றையும் கொண்டு எழுச்சி பெற்று விளங்குவதை பெருமகிழ்வுடன் அறியத்தருகிறேன். இவ்வகையில் பாடசாலைக் கட்டிடத்தைச் சிறப்பாக அமைத்துத்தந்த UNICEF அமைப்பினருக்குப் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றியுடையதாக அமைந்திருக்கும். அதேபோன்று கட்டிட வேலைகளை முதலில் மேற்கொண்ட UNOPS நிறுவனத்தாருக்கும் மிகுதி வேலைகளை நிறைவு செய்த Eurovile ஸ்தாபனத்தாருக்குப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய கட்டிடத் தொகுதியில் ஆண்கள், பெண்களுக்கென தனித்தனியாக மலசலகூடங்கள் நவீனமுறையில் அமைக்கப் பட்டமையும் பாராட்டுதற்குரியதாகும்.

எமது பாடசாலையில் 2009/2010ம் ஆண்டு பல மாணவர்கள் இணைக்கப்பட்ட மாணவர்களாக விளங்கியபோதும் ஒருசிலமாணவர்கள் திரும்பிச் சென்றபோதும் ஏனைய மாணவர்கள் நிரந்தரமாக எமது பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றனர்.

2011ம் ஆண்டு மாணவர் தொகை விபரம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| தரம் 1 | 08 | 11 | 19 |
| 2 | 22 | 16 | 38 |
| 3 | 20 | 18 | 38 |
| 4 | 22 | 18 | 40 |
| 5 | 13 | 23 | 36 |
| 6 | 19 | 16 | 35 |
| 7 | 18 | 12 | 30 |
| 8 | 25 | 11 | 36 |
| 9 | 15 | 13 | 28 |
| 10 | 29 | 32 | 61 |
| 11 | 39 | 15 | 54 |
| மொத்தம் | 230 | 185 | 415 |

**தற்போது பாடசாலை ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 12 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 08 |
| பகுதிநேர ஆசிரியர்கள் (2 நாள்) | 03 |
| ஆசிரிய உதவியாளர்கள் | 03 |
| இணைக்கப்பட்ட ஆசிரியர்கள் | 02 |
| பகுதிநேர ஆங்கில ஆசிரியை | 01 |
| | 29 |

**22.10.2010ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பாடசாலைக்கு வருகை தந்த ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| 1. திரு. ஆ.குணநேசன் | 03.01.2011 |
| 2. திருமதி. அ.பாஸ்கரன் (2 நாள்) | 06.01.2011 |
| 3. திருமதி. த.சற்குணராசா (இ.ஆ) | 11.01.2011 |
| 4. திரு. கு.பாஸ்கரன் | 24.01.2011 |
| 5. திருமதி. சு.சுரேஷ்குமார் (ப.ஆ.ஆ) | 20.05.2011 |
| 6. திரு. வா.விநாயகமூர்த்தி | 16.06.2011 |

**பாடசாலையிலிருந்து சென்ற ஆசிரியர்கள்**

1. செல்வி. சு.பத்மலதா
2. திருமதி. வ.மனோகரன்
3. திரு. கு.பாஸ்கரன்

எமது பாடசாலையில் கணித ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோது சேவை அடிப்படையில் உதவிபுரிந்த ஆசிரியர் திரு. ஆ.கிருபாகரன் அவர்கள் மாகாண சபை கல்வி அமைச்சில் முகாமைத்துவ உதவியாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது சேவை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அவரது சேவைக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பரீட்சைப் பெறுபேறுகள்

### 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சதவீதம் |
|---|---|---|---|
| 2010 | 30 | 01 | 3% |

### க.பொ.த. (சா.த) பரீட்சை - 2010

| பாடங்கள் | விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை | சித்தியடைந்த வீதம் |
|---|---|---|---|---|
| 01. சைவசமயம் | 25 | 23 | 22 | 96 |
| கத்தோலிக்கம் | 01 | 01 | 01 | 100 |
| 02. மொழியும் இலக்கியமும் | 26 | 24 | 22 | 92 |
| 03. ஆங்கில மொழி | 26 | 24 | 05 | 21 |
| 04. விஞ்ஞானம் | 26 | 24 | 10 | 42 |
| 05. கணிதம் | 26 | 24 | 15 | 63 |
| 06. வரலாறு | 26 | 24 | 08 | 33 |
| 07. தொகுதி - 1 | | | | |
| புவியியல் | 16 | 14 | 08 | 57 |
| வணிகமும் கணக்கீடும் | 02 | 02 | 02 | 100 |
| முயற்சியாண்மைக்கல்வி | 08 | 08 | 02 | 25 |

| பாடங்கள் | விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர் எண்ணிக்கை | சித்தியடைந்த வீதம் |
|---|---|---|---|---|
| 08. தொகுதி - 2 | | | | |
| சங்கீதம் | 07 | 06 | 05 | 83 |
| சித்திரம் | 15 | 14 | 11 | 79 |
| நடனம் | 04 | 03 | 03 | 100 |
| 09. தொகுதி - 3 | | | | |
| சுகாதாரம் | 06 | 05 | 04 | 80 |
| கடல்வளம் | 15 | 14 | 14 | 100 |
| தகவல் தொடர்பாடல் | 05 | 05 | 04 | 80 |

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | உயர்தரபிரிவுக்கு தெரிவானோர் | சதவீதம் |
|---|---|---|---|
| 2010 | 24 | 13 | 54% |

**இல்ல விளையாட்டுப் போட்டி**

2011ம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப்போட்டி தீருவில் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திரு. ஆ.கேதீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் திருமதி. பாஸ்கரி கேதீஸ்வரன் அவர்கள் பரிசில்கள் வழங்கி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவ் இல்ல விளையாட்டுப்போட்டிக்கு வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி.சிறிகாந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்து மாணவர்களின் விளையாட்டு வெளிப்பாடுகளுக்கு உற்சாகம் வழங்கினார். இம்முறையும் திக்கம் சந்தியிலிருந்து பாடசாலை எல்லைவரை ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் நெடியகாட்டிலிருந்து பாடசாலை எல்லைவரை பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெற்றமை சிறப்பான அம்சமாகும். இவ் விளையாட்டுப்போட்டியைச் சிறப்பிக்கும் வண்ணம் பின்வருவோர் கேடயங்கள் வெற்றிக்கிண்ணங்களை வழங்கி உற்சாகமூட்டினர்.

**வெற்றிக்கிண்ணம் / கேடயம் வழங்கியோர்**

| வழங்கியோர் | ஞாபகார்த்த பரிசில் | தொகை |
|---|---|---|
| 01. திரு. ரிஷிகுலதாஸ் நெடியகாடு வல்வெட்டித்துறை | | 1 வெற்றிக்கிண்ணம் |
| 02. திரு. பூ.ஜெகன் காட்டுவளவு வல்வெட்டித்துறை | | 1 வெற்றிக்கிண்ணம் |
| 03. திரு. ந.பாலராஜன் மதவடி வல்வெட்டித்துறை | | 2 வெற்றிக்கிண்ணம் |
| 04. திரு. வி.கவிச்செல்வன் ஊரிக்காடு வல்வெட்டித்துறை | அமரர். கதிர்காமத்தம்பி தேவசிகாமணி நிலஅளவை அத்தியட்சகர் | 1 வெற்றிக்கிண்ணம் |
| 05. திரு. இ.மயூரதன் வல்வெட்டித்துறை | அமரர். ம.வெங்கடாசலபிள்ளை அமரர். சகுந்தலயம்மா வெங்கடாசலபிள்ளை | 1 கேடயம் |
| 06. திரு.மா.சிவனொளி | அமரர். சிவனொளி பவித்திரா | 1 வெற்றிக்கிண்ணம் |
| 07. திரு. அ.வல்லிபுரம் | அமரர். வல்லிபுரம் தங்கவடிவேல் | 1 வெற்றிக்கிண்ணம் |
| 08. திரு. அ.வல்லிபுரம் | அமரர். வல்லிபுரம் சிவகுமார் | 1 வெற்றிக்கிண்ணம் |

இவ் இல்ல விளையாட்டுப் போட்டிக்கான நிதி அனுசரணையை பழைய மாணவர் சங்கமும், வல்வை ஒன்றியமும் அமரர் க.கேசவன் ஞாபகார்த்தமாக திரு. சி.கணேசலிங்கம் ஆகியோர் வழங்கியிருந்தனர். விளையாட்டு போட்டிக்கான கொட்டகையை வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் அமைத்துத் தந்தது. திரு. ச.ராசகுமார் அவர்கள் வாடகையின்றி 260 கதிரைகளை வழங்கியிருந்தார். திரு. வெ.தயாபரன் (காட்டுப்புலம்) பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு வாகன சேவையை இலவசமாக வழங்கினார்கள். இவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாண்டு வலயமட்ட விளையாட்டுப்போட்டியில் Un.17 ஸ்ரீவிநோத், தட்டெறிதல் 800மீற்றர், போட்டியிலும் சே.கிருஷாந் தட்டெறிதலிலும் ம.மயூரன் குண்டெறிதலிலும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டு 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் எமது மாணவர்கள் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாண்டு செல்வன் ஸ்ரீவினோத் தட்டெறிதலில் 17 வயதுக்குட்பட்டஆண்களுக்கான போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்று தேசிய மட்டப்போட்டியில் பங்குபற்ற உள்ளமை மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

**மன்றங்கள் :**

பாடசாலையில் ஒவ்வொரு புதன் கிழமையும் தமிழ்மன்றம், கணித விஞ்ஞானமன்றம், ஆங்கிலமன்றம் சமூக சுகாதாரமன்றமும் வெள்ளிக்கிழமை தோறும் இந்து மன்றமும் செயற்பட்டு வருவதுடன் சாரணர் இயக்கம், அனர்த்த முகாமைத்துவக்குழு ஆகியனவும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

**கல்விச் சுற்றுலா :**

2011ம் ஆண்டு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மகிழ்ச்சிகரமாக மாற்றும் நடவடிக்கையாக மூன்று கட்டமாக கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. தரம் 3, 4, 5 மாணவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முக்கிய ஆலயங்கள், தொழில் ஸ்தாபனங்களைப் பார்வையிட்டனர். பின்னர் தரம் 6, 7, 8 மாணவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆலயங்கள், தொழிற்சாலைகள், மின் நிலையங்கள் என்பவற்றைப் பார்வையிட்டு இரு சுற்றுலாக்களும் ஒரு நாள் சுற்றுலாக்களாக அமைந்தன பின்னர் தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான சுற்றுலாக்கள் 3 நாள் சுற்றுலாவாகத் தீர்மானிக்கப்பட்டு அனுராதபுர வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கண்டி, நுவரெலியா, ஆகிய இடங்களுக்கும் சென்று மாணவர்கள் நாட்டின் பௌதீக அம்சங்களையும் இயற்கை எழிலையும் நேரடியாக காணும் வாய்ப்பைப் பெற்றமை சிறப்பான அம்சமாகும் இக்கல்விச் சுற்றுலாவை ஒழுங்குபடுத்திய ஆசிரியர்களின் பணி பாராட்டுதற்குரியதாகும்.

**கணனி அறை :**

எமது பாடசாலைக்கு ESKP திட்டத்தின் கீழ் கணனி அறைகிடைத்தது. இதற்கு கிடைத்த நிதி போதுமானதாக அமையாமையால் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி.சிறீதரன் அவர்கள் பன்முகவரவு செலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கிய நிதியைப் பயன்படுத்தி உட்பாதுகாப்பு இரும்புக்கம்பி வலை அமைக்கப்பட்டது. அத்துடன் வலயக் கல்வி அலுவலகத்தால் தரப்பட்ட ரூபா 100,000/- வின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி வர்ணம் பூசுதலும் நிலவிரிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இக்கணனி அறைக்கு வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டின் கீழ் 10 கணனிகள் 10 கணனிமேசைகள் 2 கணனி மேசைக்குரிய திரைகள் வழங்கப்பட்டது. இதன் காரணமாக மாணவர்கள் தரம் 10, 11ல் ICT பாடத்தைப்படிப்பதற்கான வாய்ப்பு அதிகரித்ததுடன் மாணவர்களும் கணனி தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது. அத்துடன் கணனி அறை முழுநேர உதவியாளராக தொண்டு அடிப்படையில் சேவையாற்றிவரும் செல்வி. சரண்யா அவர்களின் பணியும் பாராட்டுதற்குரியதாகும்.

**நூலகம் :**

எமது பாடசாலையில் மாணவர்களின் கற்றல் வள நிலையமாக விளங்கும் நூலகம் இதுவரைகாலமும் சிறிய அறையில் இயங்கி வருகின்றது. தற்போது அமைத்துத்தரப்பட்டுள்ள நூலகக்கட்டிடப் பகுதியில் எதிர்காலத்தில் தளபாடங்களைக் கொள்வனவு செய்து நவீனமயப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இந்நூலகத்திற்கான நூல்கள் காலத்திற்கு காலம் கிடைத்த பல்வேறு நிதிகளைப்பயன்படுத்தி கொள்வனவு செய்துள்ளோம். 2011ம் ஆண்டு அரசாங்கத்தின் Book flood programme books திட்டத்தின்கீழ் 32500/- பெறுமதியான நூல்கள் நூலகத்திற்கு கிடைத்தது அத்துடன் யாழ்ப்பாண தேசியக் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் 20000/- பெறுமதியான நூல்களை லங்கா புத்தகசாலை அன்பளிப்பாக வழங்கியது. தற்போது தர உள்ளீட்டு நிதியில் கொள்வனவு செய்யப்படும் வலம்புரி பத்திரிகையுடன் 2011மே மாதம் முதல்

திரு. ஆ.கிருபாகரன் அவர்கள் உதயன் பத்திரிகைக்குரிய நிதிப்பங்களிப்பினையும் செய்து வருகின்றார். அத்துடன் இவ்வாண்டு திரு. ந.அனந்தராஜ் திருமதி. ம.அருந்தவராசா, செல்வி விசாமினி விசாகரட்ணம் திரு. ந.சுந்தரம்பிள்ளை ஆகியோர்களும் நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். திரு. க.மகேந்திரன் அவர்கள் ஞானச்சுடர் பத்திரிகைக்கான அன்பளிப்பாக ரூபா 500/- வழங்கியுள்ளார். இவ்வகையில் நூலக அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## Task force on Distance Manegment :

சுனாமி உதவி வெளிநாட்டுத் திட்டத்தின் கீழ் எமது வேண்டுதலை ஏற்று இவ்வாண்டு எமது பாடசாலைக்கு பின்வரும் பொருட்கள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| போட்டோபிரதி இயந்திரம் | 125000.00 | |
| Stabilacer | 14500.00 | |
| Fax Mechine | 16000.00 | |
| விளையாட்டு உபகரணங்கள் | 584145.00 | 58645.00 |
| | 214145.00 | |

இவற்றினை வழங்கிய இவ் ஸ்தாபனத்தாருக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### ஒரு பானைத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் எமது பாடசாலைக்குவழங்கப்படும் நிதியுதவி தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதன்மூலம் உணவு வழங்கப்படும் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 400/- வழங்கப்படுகிறது. இந்நிதியுதவியினை வழங்கும் இங்கிலாந்தில் வாழும் உயர்ந்த உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### வல்வை ஒன்றியம் :

வல்வை மக்களின் கல்வி சமூக அபிவிருத்திக்காக பணியாற்றிவரும் வல்வை ஒன்றியம் எமது பாடசாலையில் சேவையடிப்படையில் பணியாற்றிவரும் இருவருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கிவருகின்றனர். அத்துடன் 2010ம் ஆண்டு இல்ல விளையாட்டுப்போட்டியின் போது திரு. வேலுப்பிள்ளை ஞாபகார்த்தமான கேடயத்தை வழங்கியிருந்தனர். 2011ம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டிக்கான ரூபா 10000/- வை வழங்கியிருந்தனர். எமது பாடசாலை மாணவர்களுக்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மேலதிய வகுப்புக்கள் க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் மேலதிக வகுப்புக்கள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றனர். இவர்களது பணியினால் எமது மாணவர்கள் நலன் பெற்று வருகின்றார்கள். இதற்காக பாராட்டுதலையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### பழைய மாணவர் சங்கம் :

பாடசாலையில் அனைத்து நடவடிக்கைகளிலும் பங்குகொண்டு நிதி அனுசரணையையும் பழைய மாணவர் சங்கம் வழங்கி வருகின்றது. பழைய மாணவர் சங்கம் வருடந்தோறும் கால்கோள் விழா, இல்ல விளையாட்டு போட்டி, பரிசளிப்பு விழா ஆகியபற்றுக்கு நிதி அனுசரணை வழங்கி வருகின்றனர். இவ்வருடம் இதற்கு மேலாக விளையாட்டு உபகரணம் அலுவலக கிறில் போடுதல், சைக்கிள் பாக் நீடிப்பு என்பவற்றுக்கு நிதி அனுசரணை வழங்கியதுடன் 1ம் தர வகுப்பு மாணவர்களின் வாய்மொழிமூலமான ஆங்கில வகுப்பினை ஆரம்பித்து நிதி அனுசரணை வழங்கி வருகின்றனர்.

இதற்கு மேலாக இவ்வாண்டு பழைய மாணவர் சங்கத்தினூடாக Dr.குணானந்தன் ஞாபகார்தமாக திருமதி. செல்வராணி குணானந்தன் அவர்கள் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கா 99000/- பெறுமதியான Multi-media வை வழங்கியுள்ளார். இவரது பணியும் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பேருதவியாக அமைந்துள்ளது. இவர்களுக்கு எமது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வகையில் சென்ற ஆண்டு பரிசளிப்பு விழாவிலிருந்து இன்றுவரை பழைய மாணவர்சங்கம் 305894/- வை வழங்கி பாடசாலைச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமைந்துள்ளனர். அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் சிறப்புடன் செயற்பட்டுவருகிறது. உலக உணவுத் திட்டம், வலயக்கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களை சிறப்புடன் செயற்படுத்தி பாடசாலைச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக

செயற்பட்டு வருகின்றனர். நிர்வாகசபை, அங்கத்தவர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலையின் தேவைகள் :**

எமது பாடசாலை தற்போது வளங்கள் பலவற்றைப் பெற்றுள்ள போதும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு பின்வரும் விடயங்கள் தேவையானதும் அவசியமானதாகவும் அமைந்துள்ளது.

1) புதிய கட்டிடத் தொகுதியில் விஞ்ஞான ஆய்வு கூடம் நூலகம் என்பனவற்றுக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் விஞ்ஞான ஆய்வுகூடத்திலும் நூலகத்திலும் பாதுகாப்பு பிரச்சினையாகவுள்ளது. அவற்றின் யன்னல்களுக்கு இரும்புக் கம்பிவலைகள் போட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

2) விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கும் நூலகத்திற்குமான தளபாடங்கள் பெற்றுக் கொள்ளப்படவேண்டிய நிலையில் உள்ளது.

3) விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான உபகரணங்கள் போதியளவு காணப்படாத நிலை காணப்படுகிறது.

4) விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான அலுமாரிகள் பொருத்தப்படாத நிலைகள் காணப்படுகிறது.

5) புதியகட்டிடத் தொகுதியின் முதலாவது மாடியின் பின் 2வது மாடி அமைப்பதற்கான வாய்ப்பு இருந்தும் அமைக்கப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகிறது.

6) முதலாவது மாடிக்கு செல்வதற்கான பாதைகள் பாதுகாப்புக் கருதி பூட்டப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி தேவைகளுடன் செயற்பாட்டறை ஒன்று அமைக்கப்படாமையும் முக்கிய குறைபாடாக உள்ளது. எனவே எதிர்காலங்களில் வலயக் கல்விப் பணிப்பாளரும் நலன் விரும்பிகளும் மேற்படித் தேவைகளை நிறைவு செய்து தருவார்கள் என பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கிறது. என்பதை முன்வைத்து இவ்வறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

ஆ. சிவநாதன்
அதிபர்.

# பரிசளிப்பு விழா – 2010 / 2011

## பரிசுக்குரியோர் விபரம்

### பாடரீதியான பரிசுகள் :- 2010

| இல | பெயர் | பாடங்கள் | அனுசரணை வழங்குவோர் |
|---|---|---|---|
| | | **தரம் ~ 1** | |
| 1 | கயல்விழி நடனமனோகரன் | தமிழ், சமயம், சிறப்புப்பரிசு | |
| 2 | விக்னேஸ்வரன் விதுஷன் | தமிழ் | |
| 3 | முருகவேல் விதுஷன் | தமிழ் | |
| 4 | சசிகுமார் கலையமுதன் | தமிழ் | |
| 5 | புனிதா கிருஷ்ணகுமார் | தமிழ் | |
| 6 | பகீரதன் மயூரன் | கணிதம் | |
| 7 | கிருசிகா ஆனந்தராசா | கணிதம் | |
| 8 | சிவதேவி சண்முகராசா | கணிதம் | |
| 9 | இந்திரதாஸ் மயூரதன் | சுற்றாடல் | |
| | | **தரம் ~ 2** | |
| 1 | இராஜசங்கர் விதுசன் | தமிழ், சுற்றாடல், சமயம், சிறப்புப்பரிசு | |
| 2 | பூவிகா சிவச்செல்வன் | கணிதம் | |
| | | **தரம் ~ 3** | |
| 1 | குகராசா லக்ஷன் | தமிழ், சுற்றாடல்,சமயம், சிறப்புப்பரிசு | |
| 2 | உமாச்சந்திரன். ஜனனன் | கணிதம், ஆங்கிலம் | |
| | | **தரம் ~ 4** | |
| 1 | பவிதா இரத்தினகுமார் | தமிழ், கணிதம், சுற்றாடல், சிறப்புப்பரிசு | |
| 2 | வபிஷா வேலாயுதம் | சமயம், | |
| 3 | கவிநிலா இராசசேகரம் | ஆங்கிலம் | |
| | | **தரம் ~ 5** | |
| 1 | சிவனேஸ்வரன் ரமணன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், சிறப்புப்பரிசு | |
| | | **தரம் ~ 6** | |
| 1 | பிரியங்கா புவனேஸ்வரன் | தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், சிறப்புப்பரிசு | |
| 2 | அனுசியா ஆனந்தராசா | சமயம், பிர.தொழில்நுட்பம், சுகா/உடற்.கல்வி, | |
| 3 | தனுசிகா ஸ்ரீஸ்கந்தராசா | கணிதம், வாழ்.தே+குடியுரிமை, நடனம் | |
| 4 | சாந்தினி சண்முகராசா | விஞ்ஞானம், சங்கீதம் | |
| 5 | மகாலட்சுமி கலைச்செல்வன் | சித்திரம் | |
| | | **தரம் ~ 7** | |
| 1 | புரமானந்தராசா கோபிநாத் | சமயம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வாழ்.தே+குடியுரிமை,பிர.தொழில்நுட்பம்,சிறப்புப்பரிசு | |
| 2 | தனுஷா உதயகுமார் | தமிழ், கணிதம், சங்கீதம் | |
| 3 | செல்வராசா விதுஷன் | சித்திரம் ,சுகா/உடற்.கல்வி | |
| 4 | முத்துவேல் அன்பழகன் | ஆங்கிலம், | |
| 5 | தட்சாயினி தர்மகுமார் | நடனம் | |

| | | | |
|---|---|---|---|
| **தரம் ~ 8** | | | |
| 1 | சுபாசினி இந்திரதாஸ் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், வாழ்.தே+குடியுரிமை, பிர.தொழில்நுட்பம்,சிறப்புப்பரிசு | அமரர் .க.கேசவன் ஞாபகார்த்த பரிசில் வழங்குபவர் திரு.சி.கணேசலிங்கம் |
| 2 | டிசாந்தி சிறிஸ்கந்தராசா | வரலாறு, சங்கீதம், சுகா/உடற்.கல்வி | |
| 3 | மகாலட்சுமி சிவபவன் | ஆங்கிலம், நடனம் | |
| 4 | குணசேகரம் பிரசாந்தன் | சித்திரம் | |
| **தரம் ~ 9** | | | |
| 1 | விக்னேஸ்வரன் விதுர்ஷன் | சமயம், வரலாறு, புவியியல், பிர.தொழில்நுட்பம், சுகா/உடற்.கல்வி, சிறப்புப்பரிசு | அமரர் .க.கேசவன் ஞாபகார்த்த பரிசில் வழங்குபவர் திரு.சி.கணேசலிங்கம் |
| 2 | கேசவி கணேசலிங்கம் | ஆங்கிலம், விஞ்ஞானம், வாழ்.தே+குடியுரிமை, சங்கீதம் | |
| 3 | ஜதுர்ஷா நாகராசா | தமிழ், நடனம் | |
| 4 | பிரியங்கா பாலச்சந்திரன் | கணிதம் | |
| 5 | பிருந்தா அருமைராசா | சித்திரம் | |
| **தரம் ~ 10(A+B)** | | | |
| 1 | ஜோதிகா பிறேமச்சந்திரன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, நடனம், வணிகக்கல்வி, சுகா/உடற்.கல்வி, சிறப்புப்பரிசு | இ.மயூரதரன் |
| 2 | லாவண்ணியா கனகராசா | ஆங்கிலம், சங்கீதம், ICT | |
| 3 | தமிழ்நிலா இந்திரதாஸ் | புவியியல், சித்திரம் | |
| 4 | ஸ்ரீதரன் ஸ்ரீகிருஷ்ணன் | கடல்வளம் | |
| **தரம் ~ 11(A+B)** | | | |
| 1 | லக்சியா பிறேமதாஸ் | சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, சங்கீதம், முயற்சியாண்மை, சிறப்புப்பரிசு | இ.மயூரதரன் |
| 2 | வினோதா விஜயகுமார் | புவியியல் ,கடல்வளம். | |
| 3 | ஞானரத்தினம் வசந்தகுமார் | வணிகக்கல்வி, ICT | |
| 4 | ரவீந்திரசிகாமணி குகன் | கணிதம் | |
| 5 | திவ்வியா பிறேமதாஸ் | விஞ்ஞானம் | |
| 6 | மூத்தவன் நிசாந்தன் | சித்திரம் | |
| 7 | பானுமதி பகீரதன் | நடனம் | |

# பரிசளிப்பு விழா – 2010 / 2011
## 2011ம் ஆண்டுக்குரிய சிறப்புப் பரிசுகள் விபரம்

### தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை (2010ம் ஆண்டுப்பரீட்சை)

| | |
|---|---|
| 1 | சிவனேஸ்வரன் ரமணன் (160 புள்ளி) |

### க.பொ.த (சா/த) பரீட்சை (2010ம் ஆண்டுப்பரீட்சை)

| | | |
|---|---|---|
| 1 | ஞானரத்தினம் வசந்தகுமார் | முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமரர் சிவநேசன் அமரர் ரவிராஜ் ஞாபகார்த்த பரிசில். வழங்குபவர் திரு.அ.மாதொருபாகன் |
| 2 | ரவந்திரச்சாமணி குகன் | |
| 3 | பவிதா விக்கினேஸ்வரன் | |
| 4 | வினோதா விஜயகுமார் | |
| 5 | திவ்வியா பிறேமதாஸ் | |
| 6 | செல்வராசா தமிழரசன் | |
| 7 | சிவஞானம் நிரோஜன் | |
| 8 | சிவசோதி சாம்ஜெயவேல் | |
| 9 | மூத்தவன் நிசாந்தன் | |
| 10 | பாலச்சந்திரன் கேதீசன் | |

### மெய்வல்லுநர் போட்டி -2011- வலயமட்டம் 1ம் இடம்

1. ஶ்ரீகரன் வினோத்
   வலயமட்டம் 800m, தட்டெறிதல் (17வயதுப்பிரிவு) 2ம் இடம்
   மாகாணமட்டம் தட்டெறிதல் (17வயதுப்பிரிவு) 2ம் இடம்
   தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவார் (17வயதுப்பிரிவு) தட்டெறிதல்
2. சேதுலிங்கம் கிருஷாந் தட்டெறிதல் (17வயதுப்பிரிவு) வலயமட்டம் 1ம் இடம்
3. மகேந்திரன் மயூரன் குண்டு போடுதல் (17வயதுப்பிரிவு) வலயமட்டம் 1ம் இடம்

### கரப்பந்தாட்டம் 19 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள்)

| | |
|---|---|
| 1 | துரைரத்தினம் முருகராஜ் |
| 2 | புலேந்திரன் துஷ்யந்தன் |
| 3 | ரவீந்திரன் ராஜேந்திரன் |
| 4 | சிவஞானம் நிரோஜன் |
| 5 | செல்வராசா தமிழரசன் |
| 6 | பாலச்சந்திரன் கேதீசன் |
| 7 | நந்தகுமார் இராஜேந்திரன் |
| 8 | செல்வேந்திரன் விமலன் |
| 9 | கோணேசபிள்ளை சொற்கோன் |
| 10 | மூத்தவன் நிஷாந்தன் |

### வலயமட்டப் போட்டியில் 1ம் இடம் பெற்றோர்

| | |
|---|---|
| 1 | சமூக விஞ்ஞானப் போட்டி |
| | அனுசியா ஆனந்தராசா |

### நூலக பாவனை

| | |
|---|---|
| 1 | பிரியங்கா புவனேஸ்வரன் (தரம் - 7) |
| 2 | சொப்னா சியாமளன் (தரம் - 7) |
| 3 | செல்வராசா விதுஷன் (தரம் - 8) |
| 4 | கேசவி கனேசலிங்கம் (தரம் - 10A) |
| 5 | ஜோதிகா பிறேமச்சந்திரன் (தரம் - 11A) |
| 6 | தமிழ்நிலா இந்திரதாஸ் (தரம் - 11A) |
| 7 | லாவண்ணியா கனகராசா (தரம் - 11A) |
| 8 | பாபு திலீபன் (தரம் - 11A) |
| 9 | பத்மநாதன் கஜந்தன் (தரம் - 11B) |

-3-

| | |
|---|---|
| | **பங்குனி மாதம் நடைபெற்ற வலயமட்டத்திலான சாரணர் திரளணியில் பங்கு பற்றி தரை நிகழ்ச்சியில் இரண்டாவது நிலை பெற்றோர்** |
| | 1. மூ. நிசாந்தன் |
| | 2. இ. லக்ஷ்மன் |
| | 3. பா. சர்மதாஸ் |
| | 4. பா. கஜந்தன் |
| | 5. ப. பிரசாந் |
| | 6. பா. விஜய் |
| | 7. ஆ. ஆனந்தராஜ் |
| | 8. செ. விதுசன் |
| | 9. ஸ்ரீ. அஜீத்குமார் |
| | 10. அ. கோகுலன் |
| | **கட்டுரை போட்டி - பிரதேச செயலகம் பருத்தித்துறை** |
| | நா.ஜதுர்ஷா (1ம் இடம்) |
| | **பாடசாலை சுத்தம் சுகாதாரத்தில் முன் உதாரணமாக விளங்கிய மாணவி** |
| | 1. கோமளா சித்திவிநாயகம் |
| | **மரதன் ஓட்டம் (19வயது ஆண்) வலயமட்டம்** |
| | 1. ஞானமூர்த்தி நிமலன் |
| | |
| | |

**பாடசாலையின் ஆளணி விபரம்:**

| இல | பெயர் | சேவைவகுதி | நியமனவகை | பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திரு.ஆ.சிவநாதன் | அதிபர் SLPS 2II | முதுகல்விமானி கலைப்பட்டதாரி | 01.10.2006 |
| 02 | திருமதி.ந.திருநாவுக்கரசு | பகுதிதலைவர் SLTS Gr-I | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | 01.031985 |
| 03 | திருமதி.பு.சுரேஸ்குமார் | SLTS -I | கலைப்பட்டதாரி | 05.05.2010 |
| 04. | திருமதி.ச.புலந்திரலிங்கம் | SLTS -2 -I | பயிற்றப்பட்ட கணிதம் | 19.071993 |
| 05. | திரு.ப.குகதாஸ் | SLTS -2 -I | பயிற்றப்பட்ட கணிதம் | 08.05.2010 |
| 06 | திருமதி.வ.ஜெயக்குமரன் | SLTS -2 -I | பயிற்றப்பட்ட ஆங்கிலம் | 05.05.2010 |
| 07 | திருமதி.ய.திருக்குமார் | SLTS -2 -II | வர்த்தக பட்டதாரி பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி | 15.01.2001 |
| 08 | திரு.வே.சசிகுமார் | SLTS -2 -II | வர்த்தக பட்டதாரி | 04.01.2010 |
| 09 | திருமதி.ஞா.நகுலேஸ்வரன் | SLTS -2 -II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி | 01.07.2003 |
| 10 | செல்வி.அ.சின்னத்தம்பு | SLTS -2 -II | பயிற்றப்பட்ட சங்கீதம் | 01.07.2007 |
| 11 | திருமதி.தே.அருள்வரதராஜன் | SLTS -2 -II | கலைப்பட்டதாரி பயிற்றப்பட்ட வர்த்தகம் | 01.07.2003 |
| 12 | திரு.பா.சிறிகுமரபரன் | SLTS -2 -II | கலைப்பட்டதாரி | 13.09.2010 |
| 13 | திரு.ஆ.குணநேசன் | SLTS -2 -II | பயிற்றப்பட்ட கணிதம் | 01.01.2011 |
| 14 | திருமதி.தே.யோகேந்திரன் (பகுதி நேரம்) | SLTS -2 -II | பயிற்றப்பட்ட நடனம் | 11.02.2010 |
| 15 | திருமதி.அ.பாஸ்கரன் (பகுதி நேரம்) | SLTS -2 -II | பயிற்றப்பட்ட உடற்கல்வி | 01.01.2011 |
| 16 | திரு.வா.விநாயகமூர்த்தி | SLTS -2 -II | விஞ்ஞானபட்டதாரி | 17.06.2011 |
| 17 | திருமதி.சு.இராஜேஸ்கண்ணன் | SLTS -3 -I | கலைப்பட்டதாரி | 07.09.2005 |
| 18 | திருமதி.சி.திலகநாதன் | SLTS -3 -I | கலைப்பட்டதாரி | 07.09.2005 |
| 19 | திருமதி.பா.சுதர்சன் | SLTS -3 -I | கலைப்பட்டதாரி | 07.09.2005 |
| 20 | செல்வி.ஞா.ஞானசுந்தரம் | SLTS -3 -I | கலைப்பட்டதாரி | 14.09.2005 |
| 21 | திருமதி.சு.ரகுணன் | SLTS -3 -I | வர்த்தக பட்டதாரி | 24.09.2010 |
| 22 | திரு.த.சுரேஷ்குமார் (பகுதி நேரம்) | SLTS -3 -I | பயிற்றப்பட்ட சித்திரம் | 08.02.2010 |
| 23 | திரு.த.ரூபரஞ்சன் | SLTS -3 –II | பயிற்றப்பட்ட கடல்வளம் | 09.03.2010 |
| 24 | திருமதி.ந.மணிராஜன் | | ஆசிரிய உதவியாளர் | 16.11.2009 |
| 25 | திருமதி.வ.விஜயப்பிரகாஷ் | | ஆசிரிய உதவியாளர் | 16.11.2009 |
| 26 | செல்வி.ஸ்ரீ.சிவலிங்கம் | | ஆசிரிய உதவியாளர் | 16.11.2009 |
| 27 | திருமதி.சு.சுரேஸ்குமார் | | பகுதி நேரஆசிரியர் (ஆங்கிலம்) | 20.05.2011 |

## தற்காலிக இணைப்புப் பெற்று கடமை புரியும் ஆசிரியர்கள் :

| இல | பெயர் | சேவைவகுதி | நியமனவகை | பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திருமதி.த.சற்குணராசா | SLTS 3 -I | பயிற்றப்பட்ட கணிதம் | 08.10.2009 |
| 02 | திருமதி.சு.மங்களரூபன் | SLTS 3 -I | பயிற்றப்பட்ட சமூகக்கல்வி | 29.10.2009 |

## கல்வி சாரா ஊழியர்கள்:

| இல | பெயர் | சேவைவகுதி | நியமனவகை | பாடசாலைக்கு வருகை |
|---|---|---|---|---|
| 01 | திரு.சி.தர்மராசா | | காவலாளி | 29.09.1998 |